கோவில்பட்டி நகராட்சி நகர்மன்ற
சாதாரணக்கூட்டம்

நிகழும் மங்களகரமான விசுவாவசு வருடம் மாசி திங்கள்–22, நாள்:– 06.05.2026ம் தேதி புதன் கிழமை காலை 11.00 மணியளவில் நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்ற நகர்மன்ற சாதாரணக் கூட்டம்.

முன்னிலை:–தீரு.ரா.சீ.ரமேஷ்
நகர்மன்ற தலைவர்(பொ)

பொருள் எண்:–1

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி நகராட்சி 2022–ம் ஆண்டு நடைபெற்ற நகர்புற உள்ளாட்சி தேர்தலில் 16 வது வார்டு நகர்மன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டு நகர்மன்ற தலைவராகவும் பதவி வகித்து வரும் திரு.கா.கருணாநிதி அவர்கள் 05.05.2026ம் நாளிட்ட கடித்த்தில் தான் 2026ம–ஆம்ஆண்டு 218–கோவில்பட்டி சட்டமன்ற பேரவைத் தொகதியிலிருந்து 24.04.2026ல் நடைபெற்ற நட்டமன்ற பொது தேர்தலில் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதால் 16வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் மற்றும் நகர்மன்ற தலைவர் பதவியினை 05.05.2026 முதல் ராஜினாமா செய்துள்ளர். மேற்கண்ட திரு.கா.கருணாநிதி அவர்கள் 16வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் மற்றும் நகர்மன்ற தலைவர் பதவியினை ராஜினாமா செய்துள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

திரு.கா.கருணாநிதி அவர்கள் 16வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் மற்றும் நகர்மன்ற தலைவர் பதவியினை ராஜினாமா செய்துள்ளத்த அனுமதித்து ஏற்கலாம் மேலும் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023, பிரிவு 155(2)ன் படி நகர்மன்ற தலைவர் இல்லாதபட்சத்தில் நேர்வுக்கேற்ப நகர்மன்ற துணைத்தலைவர், சட்டம் மற்றும் அதன் கீழ் வகுக்கப்பட்ட விதிகளில் வரையறுக்கப்பட்டவாறு தலைவரால் செலுத்தப்படக்கூடிய அதிகாரங்களை செலுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து நகர்மன்ற தலைவரின் அலுவல்களை நகர்மன்ற துணைத்தலைவர் புரிந்து வர அனுமதிக்கலாம்.

தீர்மான எண்:–1370

தீர்மானம்:– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது